# 9. கரைசல்கள்

I. சரியான விடையைத் தேர்ந்தெடு.

1. நீரில் கரைக்கப்பட்ட உப்புக் கரைசல் என்பது ________ கலவை.
அ. ஒருபடித்தான ஆ. பலபடித்தான
இ. ஒருபடித்தான மற்றும் பலபடித்தானவை ஈ. ஒருபடித்தானவை அல்லாதவை
விடை: ________

2. இருமடிக்கரைசலில் உள்ள கூறுகளின் எண்ணிக்கை ________.
அ. 2 ஆ. 3 இ. 4 ஈ. 5
விடை: ________

3. கீழ்க்கண்டவற்றுள் எது சர்வக்கரைப்பான் எனப்படுவது? ________.
அ. அசிட்டோன் ஆ. பென்சீன் இ. நீர் ஈ. ஆல்கஹால்
விடை: ________

4. குறிப்பிட்ட வெப்பநிலையில், குறிப்பிட்ட அளவு கரைப்பானில் மேலும் கரைபொருளை கரைக்க முடியாதோ அக்கரைசல் ________ எனப்படும்.
அ. தெவிட்டிய கரைசல் ஆ. தெவிட்டாத கரைசல்
இ. அதி தெவிட்டிய கரைசல் ஈ. நீர்த்த கரைசல்
விடை: ________

5. நீரற்ற கரைசலை அடையாளம் காண்க.
அ. நீரில் கரைக்கப்பட்ட உப்பு ஆ. நீரில் கரைக்கப்பட்ட குளுக்கோஸ்
இ. நீரில் கரைக்கப்பட்ட காப்பர் சல்பேட் ஈ. கார்பன் -டை-சல்பைடில் கரைக்கப்பட்ட சல்பர்
விடை: ________

6. குறிப்பிட்ட வெப்பநிலையில், அழுத்தத்தை அதிகரிக்கும் போது நீர்மத்தில் வாயுவின் கரைதிறன் ________.
அ. மாற்றமில்லை ஆ. அதிகரிக்கிறது
இ. குறைகிறது ஈ. வினை இல்லை
விடை: ________

7. 100 கி நீரில் சோடியம் குளோரைடின் கரைதிறன் 36 கி. 25 கி சோடியம் குளோரைடு 100 மி.லி. நீரில் கரைத்த பிறகு மேலும் எவ்வளவு உப்பை சேர்த்தால் தெவிட்டிய கரைசல் உருவாகும் ________.
அ. 12 கி ஆ. 11 கி இ. 16 கி ஈ. 20 கி
விடை: ________

8. 25% ஆல்கஹால் கரைசல் என்பது ________.
அ. 100 மி.லி நீரில் 25 மி.லி ஆல்கஹால் ஆ. 25 மி.லி நீரில் 25 மி.லி ஆல்கஹால்
இ. 75 மி.லி நீரில் 25 மி.லி ஆல்கஹால் ஈ. 25 மி.லி நீரில் 75 மி.லி ஆல்கஹால்
விடை: ________

9. ஈரம் உறிஞ்சிக் கரையும் சேர்மங்கள் உருவாகக் காரணம் ________.
அ. ஈரம் மீது அதிக நாட்டம் ஆ. ஈரம் மீது குறைந்த நாட்டம்
இ. ஈரம் மீது நாட்டம் இன்மை ஈ. ஈரம் மீது மந்தத் தன்மை
விடை: ________

10. கீழ்க்கண்டவற்றுள் எது நீர் உறிஞ்சும் தன்மையுடையது ________.
அ. ஃபெரிக் குளோரைடு ஆ. காப்பர் சல்பேட் பென்டாஹைட்ரேட்
இ. சிலிக்கா ஜெல் ஈ. இவற்றுள் ஏதுமில்லை
விடை: ________

**II. கோடிட்ட இடங்களை நிரப்பு.**

1. ஒரு கரைசலில் உள்ள மிகக் குறைந்த அளவு கொண்ட __________ என அழைக்கிறோம்.
   **விடை:** ______________________

2. திண்மத்தில் நீர்மம் வகை கரைசலுக்கு ஒரு எடுத்துக்காட்டு__________.
   **விடை:** ______________________

3. கரைதிறன் என்பது__________கி கரைப்பானில் கரைக்கப்படும் கரைபொருளின் அளவு ஆகும்.
   **விடை:** ______________________

4. முனைவுறும் சேர்மங்கள் __________கரைப்பானில் கரைகிறது.
   **விடை:** ______________________

5. வெப்பநிலை அதிகரிக்கும் போது கனஅளவு சதவீதம் குறைகிறது. ஏனெனில் __________.
   **விடை:** ______________________

**III. பொருத்துக.**

| | பகுதி I | | | பகுதி II | விடைகள் | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | நீல விட்ரியால் | - | அ. | $CaSO_4 . 2H_2O$ | - | | |
| 2. | ஜிப்சம் | - | ஆ. | $CaO$ | - | | |
| 3. | ஈரம் உறிஞ்சிக் கரைபவை | | [illegible] | $CaSO_4 . 5H_2O$ | - | | |
| 4. | ஈரம் உறிஞ்சி | - | ஈ. | $NaOH$ | - | | |

**IV. சரியா? தவறா? (தவறு எனில் கூற்றினை திருத்துக)**

1. இருமடிக்கரைசல் என்பது மூன்று கூறுகளைக் கொண்டது.
   **விடை:** ______________________

2. ஒரு கரைசலில் குறைந்த அளவு (எடை) கொண்ட கூறுக்கு கரைப்பான் என்று பெயர்.
   **விடை:** ______________________
   ______________________

3. சோடியம் குளோரைடு நீரில் கரைந்து உருவாகும் கரைசல் நீரற்ற கரைசலாகும்.
   **விடை:** ______________________

4. பச்சை விட்ரியாலின் மூலக்கூறு வாய்ப்பாடு $MgSO_4 . 7H_2O$.
   **விடை:** ______________________

5. சிலிகா ஜெல் காற்றிலிருந்து ஈரப்பதத்தை உறிஞ்சிக்கொள்கிறது. ஏனெனில் அது ஒரு ஈரம் உறிஞ்சு தன்மை கொண்ட சேர்மம் ஆகும்.
   **விடை:** ______________________

**V. சுருக்கமாக விடையளி.**

1. **கரைசல் - வரையறு.**

______________________

______________________

______________________

______________________